தடுத்தல் மற்றும் நீர் வளத்தினை மேம்படுத்துதல், வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழில்களை மேம்படுத்தி, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், சுற்றுச்சூழல் குறித்த கல்வி, நீராதாரத்தினை மேம்படுத்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இத்திட்டம் மாநிலத் திட்டக் குழுவால் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—50

(ஊ) வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திரத் தொகுப்பு ஊதியத்தை உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை. தமிழ்நாடு வனத் துறையில் காடுகளின் உட்பகுதிகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளில் வேட்டைத் தடுப்பு முகாம்கள் செயல்படுவதால், வேட்டையாடுதல் மற்றும் திட்டமிட்ட கடத்தல் போன்றவை கணிசமான அளவில் தடுக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட கடினமான பணியில் ஈடுபட்டு வரும் 908 வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்திரத் தொகுப்பு ஊதியம் 6,750 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

3. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கொஞ்சம் இருங்கள். ஒன்றுமில்லை, இப்போது*

வேண்டாம். பிறகு பேச வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்லப் போகிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும், பின்னர் பேச வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எப்போதும் நல்லதுக்கெல்லாம் நன்றி சொல்லிவிடுகிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தமிழ்நாடு வனத் துறையில் காடுகளின் உட்பகுதிகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளில் கள்ளத்தனமாக வேட்டையாடுபவர்களைத் தடுப்பதற்கு உதவியாகவும், வனப் பகுதிகளில் கடத்தல் போன்றவற்றை கணிசமான அளவில் தடுப்பதற்கு உதவியாகவும் இருக்கின்ற வேட்டைத் தடுப்புக் காவலர்கள் 908 பேருக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திரத் தொகுப்பு ஊதியமான ரூபாய் 6,750/–ஐ உயர்த்த வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தோம்.

அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், இன்று அவர்களின் தொகுப்பு ஊதியத்தை ரூபாய் 10,000/–ஆக உயர்த்தி வழங்கி, அவர்களுடைய வாழ்விற்கு ஆதாரம் வழங்கி, வாழ்வை உயர்த்தி, திட்டமிட்டு ஊதிய உயர்வு அளித்திருக்கின்ற அந்த அறிவிப்புக்கு, ‘ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்’ என்ற அறிஞர் அண்ணா அவர்களின் வழியில் ஆட்சி நடத்திய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வனத் துறையின் சார்பில் மகிழ்ச்சியோடு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் புரட்சிகரமான திட்டங்களை முன்னெடுத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், தமிழக மக்களின் நலன் காக்கும் திட்டங்கள் மற்றும் அரசின் கொள்கை முடிவுகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகளால் 100 நாட்களில் 1,969 கோப்புகளில் கையொப்பமிட்டு அனுமதி அளித்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2017 ஜூலை 19] [திரு. எஸ்.பி. வேலுமணி]

பொதுமக்களுக்குப் போதுமான அளவில் நியாய விலையில் மணல் கிடைக்க அரசே நேரடி விற்பனை, (மேசையைத் தட்டும் ஒலி) ஏரி, கால்வாய், அணைகளில் உள்ள வண்டல் மண்ணை அரசே எடுத்து விவசாயிகளுக்கு விலையின்றி கொடுத்து அவர்களின் நிலங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி, 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30 மாவட்டங்களில் குடிமராமத்துப் பணிகளுக்குக் கூடுதல் நிதியொதுக்கீடாக 300 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு, நீண்ட நெடுங்காலத்திற்குப் பின்னர் மேட்டூர் அணையைத் தூர் வாரும் பணி, அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமை, தென்னையிலிருந்து நீரா பானம் தயாரிக்க ஆணை, அத்திக்கடவு–அவினாசித் திட்டத்தைச் செயல்படுத்த 250 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு என பல புதுமைத் திட்டங்களை வார்த்தெடுத்து எங்கள் கொங்கு மண்டலமாம் கோவை மாவட்டத்திற்கு எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அந்த வழியிலே மெட்ரோ இரயில் என்ற அற்புதமான திட்டத்தை இன்றைக்கு அறிவித்து, கோவை மாவட்டத்து மக்களின் நெஞ்சில் பால்வார்த்துள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள். 'நிலையான ஆட்சி, நிரந்தர வளர்ச்சி' என்ற இலக்குடன் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை தலைமையேற்று வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் கோவை மாவட்டத்து மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்து, தன்னுடைய வழக்கறிஞர் பதவியைக்கூட துச்சமென மதித்து துறந்து, இந்தியாவிலே பொதுவுடைமை இயக்கத்தை ஆரம்பித்து, ஆரம்பித்ததோடு மட்டுமல்லாமல், இந்தியாவிலேயே மே தினத்தைக் கொண்டாடிய பெருமை சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களையே சாரும். பாரிமுனை, கடற்கரை ஆகிய இரண்டு இடங்களில் மே தினத்தைக் கொண்டாடியவர். பொதுவுடைமைக் கருத்துகளை முன்வைத்ததோடு மட்டுமல்லாமல், தானே*

ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டுமென்பதற்காக, தான் ஈட்டிய செல்வங்களையெல்லாம் வழங்கியவர். சென்னையில் பிரதான சாலையான காமராஜர் சாலையில் உள்ள லேடி வெல்லிங்டன் கல்லூரியானது கல்லூரிக் கல்வி பெற வேண்டுமென்பதற்காக சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களால் அளிக்கப்பட்ட தானம். அதேபோன்று, சுவாமி விவேகானந்தர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுடைய விருந்தினராக தங்கிய இடம், இன்றைக்கு விவேகானந்தர் இல்லமாக உருவெடுத்திருக்கின்றது. அதுவும், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் நாட்டுக்கு அளித்த ஒரு சொத்து. எனவே, அப்படிப்பட்ட ஒரு தியாகத் தலைவர், பொதுவுடைமைவாதி, தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுத்தவர். அன்றும், இன்றும், என்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற சிந்தனைச் சிற்பி சிங்காலவேலர் பெயரில் இன்றைக்கு ஒரு விருதினை ஏற்படுத்திய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எல்லோர் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக மீனவச் சமுதாய மக்கள் காலம் காலமாக இதனை எதிர்பார்த்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இன்றைக்கு அந்தக் கனவை நனைவாக்கியதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேட்டிலிருந்து ஆலந்தூர் வரை 29–6–2015 அன்றும், திருவொற்றியூரிலிருந்து விம்கோ நகர் வரை 23–7–2016 அன்றும், சின்னமலையிலிருந்து விமான நிலையம் வரையிலும், ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையிலும் 21–9–2016 அன்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, துவங்கப்பட்டன. கோயம்பேட்டிலிருந்து நேரு பூங்கா வரை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவங்கப்பட்டது. இன்றையதினம் சென்னை மெட்ரோ இரயில் சேவையினை விரிவுபடுத்தி, சென்னை நகரின் இதரப் பகுதிகளிலுள்ள மக்களுக்குப் பயன்பெறும்வகையில் இரண்டாம் கட்டமாக 45.77

கிலோ மீட்டர் நீளத்தில், மாதவரத்திலிருந்து சிறுசேரி வரையிலான வழித்தடம்–3, 17.12 கிலோ மீட்டர் நீளத்தில், கோயம்பேட்டிலிருந்து கலங்கரை விளக்கம் வரையிலான வழித்தடம்–4 மற்றும் 44.66 கிலோ மீட்டர் நீளத்தில் மாதவரத்திலிருந்து சோழிங்கநல்லூர் வரையிலான வழித்தடம்–5 என மொத்தம் 107.55 கிலோ மீட்டர் நீளத்திலும் மூன்று மெட்ரோ வழித்தடங்களை 85,047 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த முடிவு செய்து, மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக அனுப்பி வைத்து, பேரவை விதி 110–ன்கீழ் அறிவிப்பு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தொழில் துறையின் சார்பில் என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் உத்தேசிக்கப்பட்டுள்ள நான்காவது வழித் தடத்தினை வடபழனி, போரூர் வழியாக பூவிருந்தவல்லி வரை நீட்டிப்புச் செய்து 3,850 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற முடிவு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தொழில் துறையின் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கோயம்புத்தூரில் தற்சமயம் சென்னை மெட்ரோ நிறுவனத்தால் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, ஜெர்மன் நாட்டு KFW நிதி நிறுவனத்தின் நிதியுதவி வாயிலாகச் செயல்படுத்த அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தொழில் துறையின் சார்பாக என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்களைப் பற்றி பேசுகின்ற நேரத்தில், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ‘கத்தி முனையோடு பேனா முனை வலுவானது’ என்று சொன்னார்கள். அந்தவகையில் அண்ணாவின் பெயரைத் தாங்கிய இயக்கத்தை வழி நடத்தி, தமிழகத்தில் பொற்கால ஆட்சி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலம்தான் பத்திரிகையாளர்களின் பொற்காலம் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் 3–8–2011 அன்று 25 இலட்சம் ரூபாய் செலவில் பத்திரிகையாளர்களுக்கென்று தனியாக ஒரு செய்தியாளர் கூடத்தினை, ஓர் அறையைத் திறந்து வைத்து,

பத்திரிகையாளர்கள், புகைப்படக்காரர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் ஆகியோருக்குத் தேவையான இருக்கை வசதி, செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ளும்வகையில் தொலைக்காட்சி வசதி, கணினி, இன்டர்நெட் வசதி, Wi–fi வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கழிப்பிட வசதி அவர்களுடைய மின்னணுச் சாதனங்களை வைக்க பாதுகாப்புப் பெட்டக வசதி ஆகிய அனைத்து வசதிகளையும், செய்தியாளர்கள் நலன் மற்றும் அவர்களுடைய உடைமைகளின் பாதுகாப்பு கருதி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்கெனவே செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று தலைமைச் செயலகத்திலுள்ள பத்திரிகையாளர் ஊடக மையத்தினை 31 இலட்சம் ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்கள் 12–10–2012–ல் துவக்கி வைத்தார்கள் என்ற செய்தியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத்தை மூன்று முறை உயர்த்தி 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் காட்டினார்கள். அம்மா அவர்களின் அரசை வழி நடத்தி வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத்தை ஒரே அறிவிப்பில் அவர்கள் எதிர்பார்த்த அளவிற்கு 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக்காட்டி அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று பத்திரிகையாளர்களின் குடும்ப ஓய்வூதியத்தையும் 4,750 ரூபாய் என்று இருப்பதை இன்றைக்கு 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் காட்டியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து பத்திரிகையாளர்கள் அனைவரின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற இலட்சிய வாழ்வு வாழ்ந்த மாதர்குலத் திலகம் மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய அறவழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் இன்று தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைக்கு 41.02 கோடி ரூபாய் செலவில் முத்தான மூன்று அறிவிப்புகளைப்

பேரவை விதி 110–ன்கீழ் வெளியிட்டதற்கு என் சார்பாகவும், துறையின் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூக்களுக்கும் புன்னகையைக் கற்றுத் தந்த பொன்மனச் செம்மலின் வாரிசு, வாய்மையால் போராடி, வரலாறு படைத்திட்ட மக்களின் மனதில் நிலை கொண்ட, தெய்வத்தின் இலாவா வழி நடத்தும் மக்கள் செல்வர், மகத்தான முதல்வர் எங்கள் அண்ணன் ஈ.பி.எஸ்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் நெஞ்சக் கதவுகளைத் திறந்து, நேசக் காற்றை வீசச் செய்யும் விதமாக, வாடகைக் கட்டடத்தில் இயங்கிவந்த விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டி, சுக வாழ்க்கை வாழ ரூ.13.87 கோடி நிதி ஒதுக்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினை வெளியிட்டமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் சார்பாகவும், என் துறை சார்பாகவும், எங்கள் இன மக்கள் சார்பாகவும் ஆயிரம் நன்றிகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழையும், தமிழ்நாட்டையும் தன் இரு விழிகளாய்க் கொண்ட தமிழ்நாட்டின் காவல் தெய்வம், அல்லும், பகலும் அருந்தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து, வங்கக் கடலோரம் உறங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அவர்தம் வழியில் ஆற்றல் மிக்க அரசினை நடத்திச் செல்லும் அன்பு, பண்பு, பாசம் நிறைந்த குணசீலர், மக்களின் நாடித் துடிப்பு அறிந்து செயலாற்றும் செயல் வீரர், மக்கள் நலத் தொண்டர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று சட்டப் பேரவையில் விதி 110–ன்கீழ் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழர் பண்பாட்டுப் பாரம்பரிய அருங்காட்சியகம் நிறுவப்படும் என்றும், அதற்காக முதற்கட்டமாக ரூபாய் 15 கோடி நிதி ஒதுக்கப்படும் என்று அறிவித்து பழந்தமிழ்ப் பெருமையினை உலகமறியச் செய்துள்ளமைக்கும், சிந்தனைச் சிற்பி, பொதுவுடைமைப் போராளி, உழைக்கும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் சிங்காரவேலர் பெயரில் விருது அறிவித்து, ரூபாய் 1 இலட்சம் பரிசு, 1 சவரன் தங்கப் பதக்கம் மற்றும் தகுதியுரை ஆகியவை சித்திரை தமிழ்ப் புத்தாண்டு விருதுகளோடு தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பு உலகத் தமிழர்கள் மனத்தில் தேனாய் இனிக்கும். இத்தகைய முத்தான இரண்டு அறிவிப்புகளை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, என் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும், தமிழறிஞர்களின் சார்பாகவும், துறையின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மன்றத்தில் விதி 110–ன்கீழ் இந்து சமய அறநிலையங்கள் துறையின் சார்பாக புனித யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களின் மனம் குளிரும் வகையில், தமிழ்நாட்டைச் சார்ந்த யாத்ரீகர்களின் மானசரோவர் மற்றும் முக்திநாத் புனிதப் பயணத்தை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுக்கு 500 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுவரும் மானியத்தை தற்போது 1000 பயனாளிகளாக உயர்த்தி வழங்கியமைக்கும் கிராமப்புறங்கள் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளிலுள்ள திருக்கோயில்களைச் சீரமைக்கும் விதமாக, கிராமப்புற மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களைப் புதுப்பிப்பதற்காக ஏற்கெனவே ரூபாய் 1 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது. திருக்கோயில்களின் எண்ணிக்கை 1000–லிருந்து 2000 ஆக உயர்த்தப்படும் என்ற இரண்டு முத்தான அறிவிப்புகளை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், துறையின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.